

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.4.2025) தலைமைச் செயலகத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் மற்றும் மத்தியக் குழு உறுப்பினர் கே. பாலகிருஷ்ணன் ஆகியோர் சந்தித்து, மாண்பமை உச்சநீதிமன்றம், ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக தீர்ப்பளித்ததையொட்டி வாழ்த்துத் தெரிவித்து, மதுரையில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய 24–வது மாநாட்டில் கலந்து கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு நேற்று முன்தினம் (10.4.2025) தலைமைச் செயலகத்தில், அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன் அவர்கள் தான் எழுதிய “Leo The Untold Story of Chennai Super Kings” என்ற புத்தகத்தை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.4.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தவ்ஜித் ஜமாத் கட்சியின் மாநிலத் தலைவர் ஆர்.அப்துல் கரீம், மாநிலப் பொருளாளர் ஏ. இப்ராஹீம், மாநிலத் துணைத் தலைவர் கே. தாவூத் கைஸர், மாநிலத் துணை பொதுச் செயலாளர் ஏ.கே.அப்துல் ரஹீம், மாநிலச் செயலாளர் ஐ.அன்சாரி ஆகியோர் சந்தித்து, ஒன்றிய அரசு அறிமுகம் செய்துள்ள வக்ஃபு சட்டத் திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா ஆகியோர் உடனிருந்தனர்.

### கழக ஆட்சியில்

# கோவை தெற்கு தொகுதியில் நடைபெற்று வரும் எண்ணற்ற பணிகள்!

## பேரவையில் பா.ஜ.க. உறுப்பினரின் உண்மைக்கு மாறான கூற்றை மறுத்து – அமைச்சர் கே.என்.நேரு புள்ளி விவரங்களுடன் விளக்கம்!

**சென்னை, ஏப். 12 - சட்டப் பேரவையில், நேற்று முன்தினம், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பா.ஜ.க. உறுப்பினரும் கோவை தெற்கு தொகுதி எம்.எல்.ஏ.வுமான வானதி சீனிவாசன் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்ட உண்மைக்கு மாறாக மறுத்து அமைச்சர் கே.என். நேரு, கோவை தெற்கு தொகுதியில் நடைபெற்று வரும் பணிகளை புள்ளி விவரங்களுடன் பட்டியலிட்டார்.**



அமைச்சர் கே.என்.நேரு குறிப்பிட்டதாவது:

உறுப்பினர் வானதி சீனிவாசன் பேசுகிறபோது, முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி கோவைக்கு வந்து பல்வேறு திட்டங்களை அறிவிக்கிறார்கள். ஆனால், அந்த அறிவிப்பு, அறிவிப்பு அளவிலேயே இருக்கிறது. எந்தப் பணியும் முன்னேற்றமில்லை என்று சொன்னார்கள். மேலும், multilevel car parking அந்தப் பகுதியிலே கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதையும் வேண்டுமென்று சொன்னார்கள்.

அவருடைய தொகுதியில் மட்டும் 2021 ஆம் ஆண்டு தொடங்கி, இன்று வரை இந்த நான்காண்டு காலத்தில் என்னென்ன பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் சொல்கிறேன்.

பணிகளுடைய விவரம். சாலைப்பணிகள் திட்டம் மொத்தம் எடுத்துக் கொண்ட பணிகள் 1,017. அதற்கான செலவு 8,341 இலட்ச ரூபாய். முடிவுற்ற பணிகள் 935. நடைபெற்றிருக்கின்ற பணிகள் 33. இன்னும் எதிர்ப்பார்க்கின்ற பணிகள் 49.

அதேபோல, சாலைப் பணிகள் பொது நிதியிலிருந்து 60 பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 623 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. முடிவுற்ற பணிகள் 53. நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பணிகள் 7. கட்டடங்கள், 197 கட்டடங்கள் கிட்டத்தட்ட 7,632 இலட்சத்திற்கு 122 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 35 பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மழைநீர் வடிகால்கால் 86 இடத்திலே கட்டப்பட்டிருக்கின்றன. 1,648 இலட்சம் ரூபாய். 69 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 17 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தூர் வாருதல், மழைநீர் வடிகால் மற்றும் ஓடைகள் 43 பணிகள். 264 இலட்சத்திற்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

அவற்றில் 40 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 3 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நேற்று முன்தினம்கூட, எங்கள் பகுதியிலே பூங்காக்கள் வேண்டுமென்று நீங்கள் கேட்டீர்கள். ரூ.9,639 இலட்சம் மதிப்பீட்டில் 14 பூங்காகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 8 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 6 பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட ரூ.2,101 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டிருக்கின்றன. 2 கோடி ரூபாய் செலவில் தெருவிளக்குகள் மாற்றப்பட்டிருக்கின்றன. குடிநீர் விநியோகம் மற்றும் ஆழ்குழாய் கிணறு பணிகளைப் பொறுத்தவரையில் 110 பணிகள் ரூ.1,577 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 102 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 8 பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் 66 பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ரூ.6,718 இலட்சம் அளவிற்கு செலவு செய்யப்பட்டிருக்கிறது. அவற்றில் 57 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 9 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மற்றவை 159 பணிகள்,

ஆக மொத்தம், எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள் 1,758, கிட்டத்தட்ட ரூ.350 கோடி 41 இலட்சம் மதிப்பீட்டில் உங்கள் தொகுதியில் மட்டும் இந்த பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘Multilevel car parking குறித்து சொல்லி இருக்கிறார்கள். அதையும் கவனத்தில் வைத்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு விளக்கமளித்தார்.

### பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்களுக்கு ஊக்கமளிக்கும் உச்சநீதிமன்றத் தீர்ப்பு!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - கலைஞர் வழியில் மாநில உரிமை காக்க போராடுகிறார்!

## நாமக்கல்லில் - கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. பேட்டி!

நாமக்கல், ஏப். 12-

தமிழ்நாடு அரசால் உச்ச நீதிமன்றத்தில் பெறப்பட்ட வரலாற்றுச்சிறப்பு மிக்க தீர்ப்பு, இந்தியாவில் பா.ஜ.க. அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் மாநில உரிமைகளை காக்க போராடி வருகிறார் என மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தெரிவித்தார்.



நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் இது குறித்து நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், பேராசிரியர் அரங்கில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

திமுகவின் நீண்ட நாள் போராட்டமாகவும், கொள்கையாகவும், லட்சியமாகவும் இருக்கக்கூடிய மாநில சுயாட்சிக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பு அமைந்துள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள், மசோதாக்கள், சட்டமுன்வரைவுகள் ஆளுனருக்கு அனுப்பப்பட்டு அவை நீண்ட காலமாக ஒப்புதல் வழங்காமல் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

ஆளுநர் சில மசோதாக்களை திருப்பி அனுப்பியிருந்தார். சிலவற்றை குடியரசு தலைவருக்கு அனுப்பியிருந்தார். உள்நோக்கத்துடன் காலதாமதம் செய்து வந்தார். சட்டமன்றத்தில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியும் அதற்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுனர் இருந்து வந்தார்.

இதனால் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கில் உச்சநீதிமன்றம், தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்ட மசோதாக்கள், தீர்மானங்களுக்கு ஆளுனர், குறித்த காலத்திற்குள் அனுமதி அளிக்கவேண்டும் என்ற வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை அளித்துள்ளது. அதற்கான காலநிர்ணயத்தையும் உச்சநீதிமன்றம் அளித்துள்ளது.

மேலும் ஆளுநர் கிடப்பில் போட்டிருந்த 10 மசோதாக்களுக்கும் உச்சநீதிமன்றம் தனக்குள்ள சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி ஒப்புதல் அளித்துள்ளது. இந்திய அரசியல் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பெற்றுத் தந்துள்ளார். இன்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்துள்ள சட்டப் போராட்டம் வெற்றி பெற்றிருக்கிறது.

இதன் மூலம் மாநில அரசின் உரிமைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

குறிப்பாக இந்திய வரலாற்றில் இப்போது தான் குடியரசுத் தலைவரும், ஆளுநரும் இல்லாமல் ஒரு மசோதாவுக்கு உச்சநீதிமன்றமே ஒப்புதல் வழங்கியுள்ளது. இது மாநில சுயாட்சியை உறுதி செய்யும் வகையில் இந்த தீர்ப்பு அமைந்துள்ளது.

உச்சநீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு தமிழ்நாட்டுக்கு மட்டும் இல்லை. இந்தியாவில் உள்ள அனைத்து மாநில அரசுகளுக்கும் பொருந்தும். குறிப்பாக பிஜேபி அல்லாத அரசுகள் ஆளும் மாநிலங்களுக்கும் இந்த தீர்ப்பு ஊக்கம் அளிப்பதாக அமைந்துள்ளது.

மாநில அரசின் உரிமையை நிலைநாட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிகப்பெரிய சட்டப் போராட்டம் நடத்தி, இந்தியாவுக்கே வழிகாட்டும் முதலமைச்சராக உருவெடுத்திருக்கிறார்.

உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ள 10 மசோதாக்களில், தமிழ்நாடு மீன்வள பல்கலைகழகத்திற்கு மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பெயரை வைக்கவேண்டும் என்ற மசோதாவும் அடங்கும். மாநில அரசின் உரிமையை பாதுகாக்கவேண்டும் என்ற நோக்கில் கட்சி பாகுபாடு இன்றி அதிமுக ஆட்சி காலத்தில் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாகவுக்கும் சேர்த்து தான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உச்சநீதிமன்றத்தில் அனுமதி பெற்றுக் கொடுத்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் நின்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாநில அரசின் உரிமையை நிலைநாட்டியுள்ளார்.

இவ்வாறு கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. தெரிவித்தார்.

இப்பேட்டியின் போது நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, மாவட்ட திமுக அவைத் தலைவர் சி.மணிமாறன், சேந்தமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளர் அசோக்குமார், நாமக்கல் தெற்கு நகர கழகச் செயலாளர் ராணா ஆனந்த் ஆகியோர் உடன் இருந்தனர்.



அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் செந்துறை வடக்கு ஒன்றியம் ஆர்.எஸ்.மாத்தூர் கிராமத்தில் ஒன்றிய கழக செயலாளர் வி.எழில்மாறன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் சா.சி.சிவசங்கர், தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம் செல்வேந்திரன், அசாருதீன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் சி.சந்திரசேகரன், ஏ.கே.அருண், ஆர்.கலியபெருமாள், கே.சி.லூயிகதிரவன், சதீஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### சேலம் புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து

# பொதுமக்களின் வசதிக்காக பேருந்து வழித்தட நீட்டிப்பு சேவைகள்!

## சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் துவக்கி வைத்து பேச்சு!

சேலம், ஏப். 12 -

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சேலம் கோட்டம் சார்பில் சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 06.04.2025 அன்று பேருந்து வழித்தட நீட்டிப்பு சேவைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி முன்னிலை யில் தொடங்கி வைத்தார்கள். பின்னர், சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயனடையும் வகையில் பழைய பேருந்துகளை மாற்றம் செய்து, அதற்குப் பதிலாக புதிய வகை பேருந்துகளாக இயக்கிடவும், கிராமப்புறத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் புதிய வழித்தடங்கள் மற்றும் ஏற்கனவே இயங்கி வந்த வழித்தடங்களை நீட்டிப்பு செய்து பேருந்து சேவை கிடைத்திடவும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

அந்தவகையில், சேலம் புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து பச்சமலை வழித்தடத்தில் இயங்கிய பேருந்தை டாப்செங்காட்டுப்பட்டியிலிருந்து உப்பிலியாபுரம் வரை கூடுதலாக 2 நடைகளும், சேலம் நகர பேருந்து நிலையத்திலிருந்து ஓமலூர் வழியாக தொளசம்பட்டிக்கு இயக்கப்படும் பேருந்து வாளதாசம்பட்டி வரை கூடுதலாக 2 நடைகள் வழித்தட நீட்டிப்பு செய்தும் இயக்கிடும் வகையில் இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.



மேலும், பச்சமலை பகுதியில் உள்ள பொதுமக்கள் டாப்செங்காட்டுப்பட்டியிலிருந்து உப்பிலியாபுரம் வரையிலும், சேலம் நகர பேருந்து நிலையத்திலிருந்து ஓமலூர், தொளசம்பட்டிக்கு இயக்கப்படும் பேருந்து வாளதாசம்பட்டி வரையிலும் பேருந்து சேவையினை நீட்டிப்பு செய்து தர வேண்டுமென கோரியிருந்தனர். அதனையடுத்து இன்றையதினம் மேற்கண்ட வழித்தடங்களில் பேருந்து சேவைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதே போன்று பொதுமக்களின் தேவைக்கேற்ப புதிய பேருந்து வழித்தடசேவைகள் அமைத்து தரவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென போக்குவரத்து துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சிகளில் சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் எஸ். ஜோசப் டயஸ், பொது மேலாளர் பா.கோபாலகிருஷ்ணன், சேலம் மேற்கு வட்டாட்சியர் ம.மனோகரன் மற்றும் தொ.மு.ச. நிர்வாகிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் தமிழ்நாடு பெற்றோர் – ஆசிரியர் கழகத்தின் மாநில பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கே.கலைவாணன், சி.வி.எம்.பி.எழிலரசன், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் துணைத் தலைவர் வி. முத்துக்குமார், பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர் மு.பழனிச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், தமிழ்நாடு மாநில பெற்றோர் – ஆசிரியர் கழகத்தின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.